மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

Change of School Hours.

*230 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of Madras City have made a representation to the Government to change the school hours; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

பள்ளி வேலை நேர மாற்றம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரத்திலுள்ள பள்ளி ஆசிரியர்கள் பள்ளி வேலை நேரத்தை மாற்றுமாறு அரசிற்கு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் மட்டுமல்ல, மாணவர்கள், பெற்றோர்கள் கூட கால நேரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கருதுவதாகக் கூறப்படுகிறதே, அதனால் வருகிற கல்வி ஆண்டிலிருந்தாவது அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் கால நேரத்தை மாற்றியமைக்க கல்வி அமைச்சர் முன்வருவாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாணை நிலை எண் 1031 தேதி 5-6-1977-ன் படி பள்ளிகளின் வேலை நேரம் தென் சென்னைப் பள்ளிகளுக்கு காலை 8-30 என்றும் வட சென்னைப் பகுதிக்கு காலை 9 மணி என்றும் சென்னையில் உள்ள கல்லூரிகளுக்கு காலை 9 மணி என்றும் மாற்றியமைக்கப்பட்டன. இதுபற்றி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடுகள் வந்தன. மறுபடியும் பரிசிலனை செய்து, பள்ளிக் கல்வி இயக்குநர் வேலை நேரத்தை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என்று தெரிவித்துள்ளார். அதன்படி தென் சென்னை காலை 9 மணி, வட சென்னை

காலை 10 மணி என்று இருக்கிறது. இதன் மீது போக்குவரத்துத் துறையின் கருத்துரை கேட்கப்பட்டுள்ளது. அந்தக் கருத்துரை வந்த பிறகு, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எல். பலராமன்: சென்னை மாநகராட்சியை தென் சென்னை, வட சென்னை என்று பிரித்து கால நேரத்தை ஒதுக்குவதன் காரணமாக வெளி கிராமங்களில் காலையிலேயே பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்பதால், அவற்றிற்கும் இதுபோன்ற அறிவுரை அரசிடமிருந்து வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி சென்னை நகரைப் பொறுத்தது. வட சென்னை, தென் சென்னை என்று இரண்டு பகுதியாகப் பிரிப்பதன் மூலமாக பஸ்ஸில் உள்ள நெரிசலைக் குறைக்கலாம் என்ற அடிப்படையில் போக்குவரத்துத் துறையைக் கேட்டு இப்படி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மாற்றுகின்ற இந்த நேரத்திலும் போக்குவரத்துத் துறையின் கருத்துரை கேட்கப்பட்டிருக்கிறது.

UNESCO Team.

*231 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the UNESCO Team made a study of the strategy for rural development in the State; and

(*b*) if so, the salient features thereof?

'யுனெஸ்கோ' குழு

திரு. பி. ஆர் தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 'யுனெஸ்கோ' குழு, கிராம வளர்ச்சிக்கான வாய்ப்புக் கூறுகள் குறித்து ஆய்வு செய்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் சிறப்புக் கூறுகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவானது முன்னோடித் திட்டமாக கல்வி மூலம் ஊரக வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தையே யுனஸ்கோ குழுவானது